
ப்லவ ௵ புரட்டாசி ௴
செப்டம்பர் - அக்டோபர் 2021

ஶ்ரீ:

மலர்: 4
இதழ்: 6

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:


# தேஶிக ஸந்தேஶம்





MONTHLY NEWSLETTER FROM:
**SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM**
MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799, 044 - 43863747
Email: svdd.mylai@gmail.com, web: www.svdd.com




'ராமாநுஜ தயா பாத்ரம்'
தனியன் அவதார தின உத்ஸவம்

ப்லவ ஹு புரட்டாசி மீ
செப்டம்பர் - அக்டோபர் 2021

மலர்: 4
இதழ்: 6

ஸ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

### காலை

**ஞாயிறு முதல் புதன் வரை**

| | | |
|---|---|---|
| 6.30 | - | விச்வரூபம் |
| 8.30 | - | திருவாராதனம் |
| 9.45 | - | சாற்றுமுறை |

**வியாழன் முதல் சனி வரை**

| | | |
|---|---|---|
| 6.00 | - | விச்வரூபம் |
| 7.30 | - | பொது தரிசனம் |

12.00 - உச்சிகாலம்

### மாலை

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**
ஸ்ரீ அழிசூர் R. ராகவன் | ஸ்ரீ R. அனந்தபத்மநாபன் | ஸ்ரீ R. முகுந்தன்

**Editorial Board :**
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

**Photo Courtesy:** M.K.S. Mohan Babu & P.S. Anand
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed: yeSKay designs



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 044 - 24953799, 43863747
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஸ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்$^{3}$ரி ஸமம் ஸ்தா$^{2}$நம் ப்$^{3}$ரஹ்மாண்டே$^{3}$ நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே$^{3}$வோ ந பூ$^{4}$தோ ந ப$^{4}$விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

மழை விட்டும் தூவானம் விட்டபாடில்லை.

சென்ற ஸஞ்சிகையில்தான் கொரோனா அரக்கனின் கொடுமை குறைந்து, நாடு இயல்பு நிலைக்குத் திரும்பும் அறிகுறியைக் கண்டு மகிழ்ந்து எழுதினோம். ஆவணி தொடக்கமாக ஆலயங்களில் உத்ஸவங்கள் தொடராக வரும் நிலையில், மீண்டும் பாதுகாப்பு நடவடிக்கையாக கட்டுப்பாடுகள் தளர்த்தப்படாமல் இருப்பதோடு வாரக் கடைசி மூன்று நாட்களில் பொது தர்சனத்துக்கு தடையும் விதிக்கப்பட்டது.

ஆசார்யனை 'பரீக்ஷயகாரீ' (நன்குசோதித்தபிறகே சீடர்களுக்கு போதிப்பவர்) எனச் சொல்லுவர். இது பிரமகுருவான எம்பெருமானுக்கும் பொருந்தும்போலும்! பாகவதர்களை 'ரொம்பதான்' சோதிக்கிறான் — அதுவும் புரட்டாசி பிறந்து ஆசார்ய ஸார்வபௌமனின் வார்ஷிக மஹோத்ஸவத்தை ஆவலுடன் எதிர்நோக்கியிருக்கும் பக்தர்களுக்கு, எந்தமுறையில் அது நடக்குமோ! என்ற கலக்கம் உண்டாகியிருப்பதை நம்மால் உணரமுடிகிறது. சாஸ்த்ரப்படி உத்ஸவங்களும் நடைபெறவேணும்; அதே ஸமயம் நாட்டின் நடைமுறை விதிகளுக்கும் உட்படவேணும். Tight - rope walk தான்.

மஹாவிச்வாஸம், சரணாகதிக்கு அங்கம் என வேதநூல்கள் விரித்துரைக்கும். இந்த மஹாவிச்வாஸம், சரணாகதி அனுஷ்டிக்கும்போது மட்டுமே தேவை என்பது அல்ல; அதற்குப் பிறகும் தொடர்ந்து நீடிக்கவேணும். (உபாயமாக அல்ல; ஆனால் பயனாக என்பர்). இன்றைய சூழ்நிலையில், நாம் இதை நன்கு உணர்ந்து, ''இதுவே தெய்வ ஸங்கல்பம்'' எனத் தலைவணங்கி ஏற்றுக்கொண்டு, விடியலை எதிர்நோக்கி காத்திருப்போம்.

இதற்கும் எம்பெருமான்தான் உபகரிக்கிறான். ஆம், **''தேசிக ஸந்தேச''**த்தின் மூலமாக. 'கனி இன்மையின் கருக்காய் கடிப்பவர்போல்' சிறிது ஆச்வாஸம் பெறலாம்.

நம் தேவஸ்தானத்தின் ஒரு முக்கிய அங்கமாக இயங்கிவரும் 'வேத பாராயண ஸபை' தம் செயல்பாடுகளை விரிவாக்கும் நோக்கோடு, வேத-ப்ரபந்த பாடசாலை ஒன்றை 1996-ல், ராமாநுஜ தயாபாத்ர தனியனின் அவதாரதினமான ஆவணி-ஹஸ்தத்தில் தொடங்கி, இவ்வருடம் 25 வருஷங்கள் பூர்த்தியாகின்றன. அதனை சிறப்பிக்கும் வகையில், சென்ற ஹஸ்தத்தன்று அன்று பாடசாலையின் ஆசிரியரை கௌரவிக்கும் நிகழ்ச்சி, ஸன்னிதியில் நடத்த ஆசார்யன் திருவுள்ளம் கொண்டார். இதற்குப் பொருத்தமானவர், அன்றிலிருந்து இன்றுவரை (நாளையும் தொடர்ந்து) அருளிச்செயல்களை போதித்துவரும் ஸ்ரீ உ.வே. நாட்டேரி லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யரை (ஸ்ரீஹரி ஸ்வாமியை) விட எவரே பொருத்தமானவர்! இந்த விழாவினைப் பற்றிய குறிப்புகள், வண்ணப் படங்கள், இவற்றை இவ்விதழின் பிறிதொரு இடத்திலும் காணலாம்.

இம்மாத ஸஞ்சிகை இதோ உங்கள் கையில்...

# 'Pray From Home' Weekends For Devotees

FROM THE DESK OF TRUSTEES

Like 'Work From Home' (WFH), it is 'Pray From Home' (PFH) for the devotees now-a-days during the extended weekends. Though the severity of the pandemic has reduced, there is still fear in the minds of everyone about the possibility of a third wave in the coming months.

The pandemic has thrown out of gear the routine of all. Even temples are not spared. Though the government has taken various steps to control the spread of the pandemic, in order to be more cautious, the temples in Tamil Nadu are not open to public on Fridays, Saturdays and Sundays. The temple routine rituals are not affected, but the devotees are a disappointed lot. A word of praise for them for strictly maintaining all COVID protocols like wearing mask, sanitising and observing social distance in the temple premises.

In the backdrop of the above, the month of Avani saw festivals like Sri Hayagriva Jayanthi, Sri Jayanthi, Uriyadi and the **Avathara day of 'Ramanuja Daya Paathram' Thaniyan** being celebrated. The last-named Utsavam was doubly special as it marked the completion of 25 years of remarkable kainkaryam by **Sri U.Ve. Natteri Srihari Swami** as the Divya Prabandha Adhyapaka (teacher) of the Patasala started by **The Vedaparayana Sabha** at our temple in 1996. The Sabha, on that day (Sept. 9), held a function to felicitate Sri Srihari Swami on the feat (a separate note on the event is on Page 24).

The upcoming Purattasi month is considered to be an auspicious one for Lord Srinivasa and also the Thirunakshatram of our Acharyan Swami Desikan falls in this month. There are some big Utsavams slated to be celebrated during the month, starting with the annual Pavithrotsavam and Navarathri, besides the Desikan Utsavam.

'Pavithrotsavam' is a combination of two words – Pavitra (holy) and Utsavam (festival). It is a procedure involving purificatory rituals recommended by the Aagamas to expiate the commissions and the omissions associated with daily worship (Aaraadhanam) of the Lord at the consecrated temples. Like all these years, this Utsavam will be celebrated with all its grandeur. It is to be followed by the Desikan Utsavam and Navarathri. Needless to say, all the above festivals will be performed by strictly adhering to the guidelines issued by the government, from time to time.

During this auspicious month, we invite all the devotees to join us in praying for an end to this pandemic and celebration of all our Utsavams in a grand manner as in the pre-pandemic times and we all hope and pray for the resumption of Thiruveethi Purappadu at the earliest. ❇

ஸ்ரீ:

# ப்லவ வருட புரட்டாசி மாத பஞ்சாங்கம்

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| செப்டம்பர் / அக்டோபர் | புரட்டாசி | | | | | |
| 17.09.21 | 1 | ஏகாதசி / த்வாதசி | வெள்ளி | ச்ரவணம் | புரட்டாசி மாதப்பிறப்பு – ச்ரவண ஏகாதசி. ஸ்ரீ தேசிகன் உத்ஸவர் திருமஞ்சனம். மாலை – உள் புறப்பாடு | |
| 18.09.21 | 2 | த்வாதசி | சனி | அவிட்டம் | பவித்ரோத்ஸவம் அங்குரார்ப்பணம். மாலை – ஸேனைநாதன் புறப்பாடு | |
| 19.09.21 | 3 | த்ரயோதசி / சதுர்தசி | ஞாயிறு | சதயம் | அதிவாஸம் – மாலை | |
| 20.09.2021 முதல் 26.09.2021 வரை | | | | | திருப் பவித்ரோத்ஸவம் | |
| 27.09.21 | 11 | ஷஷ்டி | திங்கள் | ரோஹிணி | ஸ்ரீ கண்ணன் ஆஸ்தானம் | |
| 28.09.21 | 12 | ஸப்தமி | செவ்வாய் | ம்ருகசிரீஷம் | திருக்கச்சி நம்பிகள் | |
| 29.09.21 | 13 | அஷ்டமி | புதன் | திருவாதிரை | ஸ்ரீ பாஷ்யகாரர் | |
| 30.09.21 | 14 | நவமி | வியாழன் | புனர்வஸு | ஸ்ரீராமர் ஆஸ்தானம் | |
| 01.10.21 | 15 | தசமி | வெள்ளி | புஷ்யம் | காலை – பெருமாள், தாயார் மூலவர் திருமஞ்சனம். தாயார் திருமஞ்சனம், மாலை – உள் புறப்பாடு. | |
| 02.10.21 | 16 | ஏகாதசி | சனி | ஆயில்யம் | காலை – பெருமாள் திருமஞ் சனம். மாலை – புறப்பாடு | |
| 03.10.21 | 17 | த்வாதசி | ஞாயிறு | மகம் | திருமழிசைப்பிரான் | |
| 04.10.21 | 18 | த்ரயோதசி | திங்கள் | பூரம் | ஸ்ரீ ஆண்டாள் | |
| 05.10.21 | 19 | சதுர்தசி | செவ்வாய் | உத்தரம் | ஸ்ரீ தேசிகன் கண்ணாடி அறைக்கு எழுந்தருளல் | |
| 06.10.2021 முதல் 15.10.2021 வரை | | | | | ஸ்ரீ தேசிகன் வார்ஷிக உத்ஸவம் | |
| 06.10.21 | 20 | அமாவாசை | புதன் | ஹஸ்தம் | நவராத்ரி உத்ஸவம் 1ம் நாள் | ஸ்ரீ V. சேஷாத்ரி |
| 07.10.21 | 21 | ப்ரதமை | வியாழன் | சித்திரை | நவராத்ரி உத்ஸவம் 2ம் நாள் | ஸ்ரீ K.R. ஸ்ரீநிவாஸன் |
| 08.10.21 | 22 | த்விதீயை | வெள்ளி | ஸ்வாதி | நவராத்ரி உத்ஸவம் 3ம் நாள் | ஸ்ரீ D. ஸுந்தரவரதன் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 09.10.21 | 23 | த்ருதீயை | சனி | விசாகம் | நவராத்ரி உத்ஸவம் 4ம் நாள் | ஸ்ரீ N.R.S. ராமக்ருஷ்ணன் |
| 10.10.21 | 24 | சதுர்த்தி | ஞாயிறு | அனுஷம் | நவராத்ரி உத்ஸவம் 5ம் நாள் | ஸ்ரீ M.K. ராமஸ்வாமி குடும்பத்தினர் |
| 11.10.21 | 25 | பஞ்சமி / ஷஷ்டி | திங்கள் | கேட்டை | நவராத்ரி உத்ஸவம் 6ம் நாள் | ஸ்ரீ P.D.R. ட்ரஸ்ட் |
| 12.10.21 | 26 | ஸப்தமி | செவ்வாய் | மூலம் | நவராத்ரி உத்ஸவம் 7ம் நாள் | ஸ்ரீ K.S. ஸேதுராமன் குடும்பத்தினர் |
| 13.10.21 | 27 | அஷ்டமி | புதன் | பூராடம் | நவராத்ரி உத்ஸவம் 8ம் நாள் | ஸ்ரீமதி அலமேலு ராமபத்ரன் |
| 14.10.21 | 28 | நவமி | வியாழன் | உத்தராடம் | நவராத்ரி உத்ஸவம் 9ம் நாள் | ஸ்ரீ S. நாராயணன் – ஸ்ரீ T. நாராயணன் குடும்பத்தினர் |
| 15.10.21 | 29 | தசமி | வெள்ளி | ச்ரவணம் | மாலை – விஜய தசமி – குதிரை வாஹனம் புறப்பாடு | ஸ்ரீ A.R. ஸந்தான க்ருஷ்ணன் – ஸ்ரீ A.K. முத்துஸ்வாமி |
| 16.10.21 | 30 | ஏகாதசி | சனி | அவிட்டம் | காலை – தேசிகன் கந்தப்பொடி வஸந்தம். மாலை – விடாயாற்றி உத்ஸவம் – முதல் நாள் – திருமஞ்சனம். ஏகாதசி திருமஞ்சனம். மாலை – புறப்பாடு | கந்தப்பொடி வஸந்தம்: ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீ பாதம் கைங்கர்யம் அஸோஸியேஷன். விடையாற்றி: ஸ்ரீமதி சுபத்ரா பாலாஜி குடும்பத்தினர் |
| 17.10.21 | 31 | த்வாதசி | ஞாயிறு | சதயம் | விஷு புண்யகாலம் – பெருமாள் திருமஞ்சனம். விடாயாற்றி 2ம் நாள் | விடாயாற்றி: ஸ்ரீ S. ஸுந்தரம் |

## ஆஸ்திகர்கள் கவனத்திற்கு

பரமபத ப்ராப்தி அடைந்தவர்களுக்கு 12 நாட்கள் வரையிலான கைங்கர்யங்களைச் செய்யும் வகையில், ஆறு பகுதிகளுடன், நம் தேவஸ்தானத்தின் '**ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்**' தை மாதம் முதல் இயங்கி வருகிறது.




**முகவரி மற்றும் விவரங்களுக்கு:**

**'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'**
9/5, வேங்கடேச அக்ரஹாரம் தெரு,
மயிலாப்பூர், சென்னை – 600004. போன்:
044 – 4322 9401.

**நிர்வாகம்:**
ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,
மயிலாப்பூர், சென்னை – 600004.

ஸ்ரீ:

# நின்றான் இருந்தான் கிடந்தான்

ஸ்ரீ உ.வே. திருவயிந்தை திருவாழி க்ருஷ்ணதேசிகாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

ஸ்வாமி நம்மாழ்வார் தம்முடைய திருவாய்மொழியில் 'பிறந்தவாறும்' பதிகத்தில் பெருமாள் தன்னுடைய அவதாரங்களில் **நின்றபடியையும், இருந்தபடியையும், கிடந்தபடியையும்** எவ்வாறு அருளிச்செய்கிறார் என்பதை சிறிது அனுபவிப்போம்.

*நின்றவாரும் இருந்தவாறும் கிடந்தவாறும் நினைப்பரியன*
*ஒன்றலா உருவாய் அருவாய நின்மாயங்கள்*
*நின்று நின்று நினைகின்றேன் உன்னை எங்ஙனம்*
*நினைகிற்பன் பாவியேற்கு*
*ஒன்று நன்குரையாய், உலகமுண்ட ஒண்சுடரே!* [5-10-6]

மேற்படி பசுரத்தில் ஆழ்வார் ஸகல கல்யாண குணங்களுடைய எம்பெருமான் தான் அவதாரங்கள் செய்யும் போது எப்படி அழகோடு நின்றான் என்கிறார்.

**ராமாவதாரத்தில் நின்றவாறு:–** விச்வாமித்ரரின் யாக ரக்ஷண காலத்தில் தான் கோதண்டம் தரித்து நின்றபடியும், பரதாழ்வான் ராம பாதுகையை வேண்ட, தான் அதன் மேல் சற்று ஏறி நின்று அனுக்ரஹித்தபடியும், **அவஷ்டப்ய ச திஷ்டந்தனம் ததர்ச தனுர்ஜிதம்** என்றபடி வாலி வதம் முடிந்து தாரைக்கு ஸேவை ஸாதித்து அவளுக்கு தான் ஸர்வேஸ்வரன் என்று நின்று காட்டியபடியும், காட்டில் முனிக்கணங்கள் இவனைத் தொழுத போது நின்றவாறு சேவை தந்தபடியும், ராவண யுத்தத்தில் வில்லும் கையுமாய் நின்று போரிட்டபடியும் காணக்கிடைக்கிறது. யுத்தத்தில் ராவணன் நிராயுதபாணியாய் நிற்க, அவன் உயிரைக்காக்க அவன் ஸாரதி தன் தேரைத் திருப்பி அவனை இருப்பிடம் கொண்டு சென்றான். அவனை ராவணன் கோபித்து, ராமன் வில்லும் கையுமாய் நின்று போரிடும் அழகை காணக்கிடைக்காமல் பண்ணி விட்டாயே என்று வருத்தப்படான் என்று பெரியோர் பணிப்பர். ராவணன் வீழ்ந்த உடன் அவன் உடலைக்காண வந்த மண்டோதரி ராமனை தரிசித்து ராமனே பரம்பொருள் என்று எண்ண உடனே பெருமாள் அவளுக்கு சதுர்புஜனாய் ஸேவை ஸாதித்து நின்றான்.

**ராமாவதாரத்தில் இருந்தபடி:-** சுமந்த்ரர் ராமனைக் காண வந்த போது ராமனும், பிராட்டியும் அமர்ந்த கோலத்தில் ஸேவை ஸாதித்தபடியும், **சித்திரகூடத்து இருந்தான்** என்று குலசேகராழ்வார் ஸாதிக்கும்படி அங்கு இருந்தபடியும், ராவண யுத்தத்திற்கு மஹாராஜர் மற்றும் இதர வானர ஸேனைகளின் முன்னிலையில் அமர்ந்து அழகுடன் விவாதித்தபடியும், ராம பட்டாபிஷேக ஸமயத்தில் ஸகல லோகங்களும் ஸேவிக்க, தம்பிமார்கள் கைங்கர்யம் செய்ய ஸீதையுடன் ரத்ன சிம்ஹாஸனத்தில் இருந்தபடியும் காட்சி தந்தான்.

**ராமாவதாரத்தில் கிடந்தபடி:-** விச்வாமித்ரரின் யாக ரக்ஷணத்தின் முன்னே தானும் இளைய பெருமாளும் சயனித்திருக்க, அருணோதயத்தில் முனிவர் வந்து இவன் அழகைப் பார்த்து எப்படி இவனை எழுப்புவது என்று எண்ணி **கௌஸல்யா சுப்ரஜா ராம பூர்வா ஸந்த்யா** என்று அருளிச் செய்ய வைத்தபடியும், சிற்றன்னையின் சொல் கொண்ட சீராமனாய் கானகம் விரும்பிச் சென்று **கல்லணைமேல் கண் துயிலக் கற்றனையோ காகுத்தா** என்றபடி வனத்திலே கல்லின் மேல் படுத்து நித்திரை கொண்டதுவும், **அஞ்சலிம் ப்ராங்முக: க்ருத்வா ப்ரதிசிஸ்யே மஹோததே** என்றபடி ஒருகடல் ஒரு கடலோடே சேர்ந்தது போலே கடற்கரையிலே (தர்ப சயன ராமனாய்) கண் வளர்ந்தருளின ப்ரகாரத்தையும் ஆழ்வார் அனுபவிக்கிறார்.

**க்ருஷ்ணாவதாரத்தில் நின்றவாறு:-** தொட்டில் குழந்தையாய் அதன் கயிறு பிடித்து எழுந்து நின்றபடியும், வெண்ணை விழுங்கும் விகிர்தனாய் ஸகாக்களின் மேலே ஏறி நின்று உறிமேலைத்தடா நிறைந்த வெண்ணையை வாரி விழுங்கியதுவும், **வண்ணமால் வரையே குடையாக மாரிகாத்தவனே மதுசூதா!** என்றபடி ஏழு நாட்காள் கோவர்த்தன தாரணம் செய்து கோஸம்ரக்ஷணம் அனுக்ரஹித்தபடியும், கருங்கண் தோகையணிந்து பசுக்கூட்டங்ககளின் நடுவில் நின்று கானகத்தில் குழலூதியபடியும், **மன்னர் மறுக மைத்துனன்மார்க்கு ஒரு தேரின் மேல் முன்னங்கு நின்று மோழை எழுவித்தவனாய்** பாரதயுத்தத்தில் அர்ஜுனனின் தேர்த்தட்டில் நின்று சங்கம் வாய்வைத்ததுவும், கலங்கிய இந்திரன் சிறுவனுக்காக **பேணிய தத்துவமும் பிணியற்ற கிரிசைகளும் காண் இதனால் விசயா!** என்று தேரிலே நின்று அரிய பொக்கிஷமான கீதோபதேசம்

| புரட்டாசியில் முக்கிய உத்ஸவங்கள் |
|---|
| **திருப்பவித்ர உத்ஸவம் (7 நாட்கள்)**<br>ஸெப்டம்பர் 20 (திங்கள்) முதல்<br>26 (ஞாயிறு) வரை |
| **நவராத்ரி உத்ஸவம் (9 நாட்கள்)**<br>அக்டோபர் 6 (புதன்) முதல் 14 (வியாழன்) வரை |
| **மஹாநவமி**<br>அக்டோபர் 14 (வியாழன்) |
| **விஜயதசமி**<br>அக்டோபர் 15 (வெள்ளி) வரை |
| **ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம் (10 நாட்கள்)**<br>அக்டோபர் 6 (புதன்) முதல் 15 (வெள்ளி) வரை |
| **ஸ்வாமி தேசிகன் திருநக்ஷத்ரம்**<br>அக்டோபர் 15 (வெள்ளி) |

செய்ததுவும் அழகல்லவோ என்கிறார் ஆழ்வார்.

**க்ருஷ்ணாவதாரத்தில் இருந்தபடி:-** தொட்டில் குழந்தையாய் கயிறு பிடித்து எழுந்து நின்றபடியிருக்க தரிக்க மாட்டாதே விழுந்து அமர்ந்தபடியும், பாண்டவர் தூதனாய் துர்யோதனாதி ஸபை சென்று அமர்ந்து விவாதம் செய்ததுவும் அற்புதம் என்கிறார் ஆழ்வார்.

**க்ருஷ்ணாவதாரத்தில் கிடந்தபடி:-** தொட்டில் குழந்தையாய் தரிக்க மாட்டாதே விழுந்து அமர்ந்தபடியும் அதுவும் பொறுக்கமாட்டாதே சாய்ந்து கிடந்தபடியும், மாணிக்கம் கட்டி வைரம் இடை கட்டி ஆணிப் பொன்னால் பிரமன் செய்த வண்ணச் சிறுத்தொட்டிலிலே சயனம் செய்து தாலேலோ பாடக்கேட்டதுவும், **நின் பள்ளிக்கட்டிற்கீழே சங்கம் இருப்பார் போல் வந்து தலைப்பெய்தோம்** என்றபடி, ராஜாக்கள் கதற பள்ளியில் சயனித்திருந்து அவர்களின் கோரிக்கைகளை கேட்டதுவும், போர் நிமித்தம் தன்னை நாடி வந்த ஸஞ்சயர் பார்த்திருக்க அர்ஜுனன் மடியில் சயனித்து காண்பித்தபடியும் மிக்க அழகு என்று ஆழ்வாரின் திருவுள்ளத்தை மேற்கண்ட பாசுரத்தில் வ்யாக்யாதாக்கள் காண்பிக்கிறார்கள்.

மேலும் ஆழ்வார் இப்படிப்பட்ட எம்பெருமானின் உருவான, அருவான மாயங்களை நினைத்து நினைத்து உருகுகின்றார். **ஆலினிலைப் பாலகனாய் அன்று உலகத்தையே** உண்ட தேவரீரை நான் எங்ஙனம் நினைப்பன் என்று நீயே கூறு என்கிறார் ஆழ்வார்.

நிற்க! ஆழ்வாரின் அவதார அனுபவங்களை அடுத்து ஆஸ்திகர்கள் அனேக திவ்யதேசங்களில் **நின்றவாறும் இருந்தவாறும் கிடந்தவாறும் ஸேவை ஸாதிக்கும்** கருணாஸாகரமான பெருமாளை ஸேவித்து அனுபவிக்க ப்ரார்த்தனை.

# ஸ்வாமி தேசிகன் கிளிகண்ணி

ஸ்ரீ உ.வே. புதுஅக்ரஹாரம் எஸ். பார்த்தஸாரதி ஸ்வாமி, பெங்களூரு

1. விளக்கொளிப் பெருமானூரில்
விளங்குநல் சோதியாக
அளத்தற் கரியன் எனக் கிளியே
துளங்கிடப் பிறந்தவனே கிளியே
விளக்கிடும் தேசிகனே!

2. ஏகலைவன் துரோணர்போல
தூப்புலாரும் உடையவரும்
ஆண்டுபல தாண்டியுமே கிளியே
வேண்டுகுரு கொண்டானடி கிளியே
ஆண்டிடும் தேசிகனே!

3. நாடகம் காவிய கத்யம்
தோத்திரம் பாசுரம் என்று
எத்தனையோ ஏட்டிலிட்டான் கிளியே
அத்தனையும் வேதாந்தமே கிளியே
வித்தகனாம் தேசிகனே!

4. இரகசியம் மூன்றினையும்
கருத்துடன் தெளியும் வண்ணம்
பரிவுடன் ஓலையிட்டான் கிளியே
அரியநிதி கொடுத்தான் கிளியே
பரிமுகன் தேசிகனே!

5. நீந்திடவும் குளித்திடவும்
ஆய்ந்திடுவான் சொற்களையே
ஆழமே காணப்புக்கால் கிளியே
வேழமே சேற்றினிடை கிளியே
வாழிய தேசிகனே!

6. கவியும் தருக்கமுமே
புவியினில் சேர்வதுண்டோ
இவரது கவிதருக்கமே கிளியே
அவியென நமையாக்குமே கிளியே
சுவையன் தேசிகனே!

7. எட்டெழுத்து எப்படித்தான்
சட்டெனவே இவர்கண்விரியும்
தொட்டணைத்த வேலுடையான் கிளியே
உட்கருத்துக் கொண்டவனே கிளியே
சிட்டரான தேசிகனே!

8. பாடியத்தைப் பாடிப்பாடி
ஓடியநற் காலம் கொண்டான்
கூடும்பிற மதத்தோருக்கே கிளியே
ஆடிநிற்கும் சிங்கமன்றோ கிளியே
பாடிடுவோம் தேசிகனே!

9. சரணநெறி சொல்லாமலே
ஒருநூலும் கிடையாதன்றோ
திறம்பட வழிகாட்டினார் கிளியே
அறத்தினை எடுத்தோதினார் கிளியே
குறையில்லா தேசிகனே!

10. வேங்கடனோ அவன்மணியோ
ஆங்கவன் இராமானுசனோ
ஏங்கித் தவித்திருப்பார் கிளியே
பாங்காய்ப் பொருந்தினனே கிளியே
தாங்கிடும் தேசிகனே!

11. சிறுமா மனிசரென்று
பெருமையன் தேசிகனை
அடியார்க்கடியான் சொல்லால் கிளியே
கிளிகண்ணி பாடிடுவோம் கிளியே
அருளுவன் தேசிகனே!

ஸ்ரீ:



*With Pranams:*

**Sridhar Parthasarathy & Family,**

Luz Church Road,

Mylapore, Chennai 600004.

**SVDD thanks Sri Sridhar Parthasarathy & Family for sponsoring this month's issue of Desika Sandesam**

ஸ்ரீ:

கண்ணுக்கினியன



ஸ்ரீஜயந்தி உத்ஸவம்


ஸ்ரீ:



ஸ்ரீஜயந்தி உத்ஸவம்

கண்ணுக்கினியன





உறியடி உத்ஸவம்



ஸ்ரீ:



**தேவஸ்தானத்தின் மேலாளர் ஸ்ரீ C.R. ராகவன் பணிநிறைவு வழியனுப்பு விழா**



**தினசரி திவ்ய ப்ரபந்த இலவச வகுப்பு**

கண்ணுக்கினியன

ஸ்ரீ:

ஸ்ரீ:

ஸ்ரீஅலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# திருப்பவித்ரோத்ஸவ பத்திரிகை

## பசலி 1431 ~ ப்லவ வருஷம் ~ 2021

## 20.09.2021 முதல் 26.09.2021 வரை

ஶ்ரிய:பதியாய் அவாப்த ஸமஸ்தகாமனாய், அர்ச்சாரூபியாய், அகலகில்லேனிறையுமென்று அலர்மேல்மங்கையுறைமார்பனாய் ஆச்ரிதோஜ்ஜீவனார்த்தம் ஆங்காங்கு கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பவனும், முதலாழ்வார்கள் மூவரில் ஒருவராகிய, ஸ்ரீபேயாழ்வார் அவதாரஸ்தலமுமாயும், தூப்புல் நிகமாந்த மஹாதேசிகனைக் கொண்டு அனுபவித்து வரும் ஸ்தலமுமாகிய திருமயிலையில் எழுந்தருளியிருப்பவனுமான ஸ்ரீதிருவேங்கடமுடையான் நாளது ப்லவ வருஷம் புரட்டாசி மாதம் 4ம் தேதி (20.09.2021) திங்கட்கிழமை முதல் பவித்ரோத்ஸம் ஆரம்பித்து நடத்திக் கொள்வதாக ஸங்கல்பித்துக் கொண்டிருக்கிறான்.

மேற்படி உத்ஸவத்தில் வேதபாராயணம், அத்யாபகம், க்ரந்த பாராயணம் ஆகிய கைங்கர்யங்களில் ஸ்வாமிகள் அன்வயித்து, மாமயிலை திவ்யதம்பதிகள், ஸ்ரீபேயாழ்வார் மற்றும் ஸ்வாமி தேசிகனின் க்ருபாகடாக்ஷத்திற்கு பாத்திரர்களாக வேணுமாய் ப்ரார்த்திக்கிறோம்.

அங்குரார்ப்பணம் – 18.09.2021 – சனிக்கிழமை மாலை
அதிவாஸம் – 19.09.2021 – ஞாயிற்றுக்கிழமை மாலை
தினசரி ஹோமம் – காலை 8:00 மணி மற்றும் இரவு 8:15 மணி
மஹாபூர்ணாஹூதி – 26.09.2021 – ஞாயிற்றுக்கிழமை
பிரதி தினம் மாலை 6.15 மணிக்கு பெருமாள், தேசிகன் புறப்பாடு

*R. ராகவன், R. அனந்த பத்மநாபன், R. முகுந்தன்*
*தர்மகர்த்தாக்கள்*

ஸ்ரீ:

| நாள் | காலை உத்ஸவ உபயம் | காலை ததீயாராதனை உபயம் | மாலை உத்ஸவ உபயம் | மாலை ததீயாராதனை உபயம் |
|---|---|---|---|---|
| 18.09.21 (சனி) | அங்குரார்ப்பணம் (மாலை)<br>ஸ்ரீ சேனைநாதன் புறப்பாடு | —— | ஸ்ரீ K.L.ராமதுரை | —— |
| 19.09.21 (ஞாயிறு) | அதிவாஸம் (மாலை) | —— | ஸ்ரீ அத்திகிரி அருளாளன் | —— |
| 20.09.21 (திங்கள்) | ஸ்ரீமதி K.R. சித்ரா கிருஷ்ணஸ்வாமி | 1. ஒலக்கூர் ஸ்ரீ R. ஸ்ரீநிவாஸன்<br>2. ஸ்ரீ S. ரவிச்சந்திரன் | ஸ்ரீ N.S. பார்த்தஸாரதி | 1. ஸ்ரீ K. ராஜகோபாலன்<br>2. ஸ்ரீ N.சேஷாத்ரி |
| 21.09.21 (செவ்வாய்) | 1. ஸ்ரீமதி ஜானகியம்மாள் பண்டு<br>2. ஸ்ரீ S.பத்மநாபன் | ஸ்ரீ K.R. ராமஸ்வாமி<br>ஸ்ரீ R. பார்த்தஸாரதி | 1. ஸ்ரீ P.V. ராகவன் (பண்டு)<br>2. ஸ்ரீ மதுராந்தகம் ஸ்ரீனிவாசன் | 1. ஸ்ரீ N.S. வரதாச்சாரி<br>2. ஸ்ரீ. நந்தகுமார் |
| 22.09.21 (புதன்) | ஸ்ரீமதி பத்மா ராமானுஜம் | ஸ்ரீ S.V.S. ராகவன்<br>ஸ்ரீ. R. ராமக்ருஷ்ணன் | ஸ்ரீ A.N.S. சுந்தரம் | 1. ஸ்ரீ A.N.S. சுந்தரம்<br>2. ஸ்ரீ L.V. நரஸிம்மன் |
| 23.09.21 (வியாழன் ) | ஸ்ரீ T.V. நரஸிம்மன் | 1. ஸ்ரீ D. சுந்தரராஜன்,<br>2. ஸ்ரீமதி D.சுஜாதா | ஸ்ரீ Dr. E. ஸ்ரீனிவாசன் | 1. ஸ்ரீ T.M. ரவி நரஸிம்மன்<br>2. ஸ்ரீ M.P. ராஜா |
| 24.09.21 (வெள்ளி) | ஸ்ரீ S. அருண் | ஸ்ரீ M.D. சுதர்ஸனம் ஐயங்கார் (பண்டு)<br>ஸ்ரீமதி ப்ரேமா பார்த்தஸாரதி | ஸ்ரீ N.K. ரங்கஸ்வாமி ஐயங்கார் குடும்பம் | 1. ஸ்ரீ R. சம்பத்,<br>2. ஒலக்கூர் ஸ்ரீ R. ராஜகோபாலன் |
| 25.09.21 (சனி) | ஸ்ரீ S. சத்யநாராயணன் &<br>ஸ்ரீ N.கேசவன் | ஸ்ரீ V.J. பார்த்தஸாரதி<br>ஸ்ரீ பத்மாவதி கைங்கர்ய ஸபா<br>ஸ்ரீமதி T.V. சாந்தா | 1. ஸ்ரீமதி கமலா & சுமைதாங்கி கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் குடும்பத்தினர்<br>2. ஸ்ரீமதி R. மஹாலட்சுமி | ஸ்ரீ T.M. ராஜகோபாலன்<br>ஸ்ரீ. R. முகுந்தன் |
| 26.09.21 (ஞாயிறு) | 1. Official Trustee of Tamilnadu CKD Mudaliar & Seshacharulu Trust<br>2. கீழச்சேரி ஸ்ரீ S. ராகவன் | ஸ்ரீ P.D. ராமஸ்வாமி ஐயங்கார் ட்ரஸ்ட் | 1. Official Trustee of Tamilnadu CKD Mudaliar & Seshacharulu Trust<br>2. ஸ்ரீ. வஸந்த் ஷான்பாக் பூர்ணாஹூதி திருமஞ்ஜனம் ஸ்ரீநிவாஸன் K. ஸ்வாமி | ஸ்ரீ P.D. ராமஸ்வாமி ஐயங்கார் ட்ரஸ்ட் |

பட்டு பவித்ரங்கள் உபயம் : Dr. திலீப் க்ருஷ்ணா; பிரதி தினம் காலை, மாலை க்ஷீர கைங்கர்யம் உபயம் : ஸ்ரீமதி ஹேமலதா ரமாமணி

CONTRIBUTIONS IN KIND / CASH ARE WELCOME

கண்ணுக்கினியன

ஸ்ரீ:

ஸ்ரீஅலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# திருமயிலை ஸ்ரீ வேதாந்த தேசிகன் வார்ஷிக மஹோத்ஸவ பத்திரிகை

கலயே ஸததம் கருணா ஜலதிம் கருணா விஷயம் கமலாதிபதே: ।
கலிவைரி ஶடாரி வசோ ரஸிகம் கவிதார்க்கிக கேஸரி ஸூரிகுரும் ॥

कलये सततं करूणा जलधिं करूणा विषयं कमलाधिपतेः
कलि वैरि शठारि वचो रसिकं कवितार्किक केसरि सूरि गुरूम्

**மாமயிலைப்பதியதனில் ஸ்ரீமத் வேதாந்ததேசிகன் ஸந்நிதியில் நாளது ப்லவ வருஷம் புரட்டாசி மாதம் 20ம் தேதி 06.10.2021 புதன்கிழமை முதல் நடைபெறும் ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் வார்ஷிக மஹோத்ஸவத்திற்கு ஸகல ஆஸ்திகர்களும் எழுந்தருளி மேற்படி உத்ஸவத்தை சிறப்பித்து, ஆசார்ய ப்ரஸாதம் பெற்று ஆனந்தித்து அடியோங்களையும் தன்யராக்கும்படி ப்ரார்த்திக்கின்றோம். புரட்டாசி 29ம் தேதி 15.10.2021 வெள்ளிக்கிழமை ஸ்ரீவேதாந்த தேசிகன் சாற்றுமுறை நடைபெறும்.**

**தற்பொழுது நிலவி வரும் அசாதாரண சூழ்நிலையை (கொரோனா) உத்தேசித்து, இவ்வருட உத்ஸவம் அரசாங்க உத்தரவை அனுசரித்து நடத்துவதாக திட்டமிடப்பட்டுள்ளது என்பதை ஆஸ்திகர்களுக்கு தெரியப்படுத்துகிறோம்.**

*R. ராகவன், R. அனந்த பத்மநாபன், R. முகுந்தன் - தர்மகர்த்தாக்கள்*

## உத்ஸவ விபரம்/ நிகழ்ச்சி நிரல்

| நாள் | உற்சவம் | நேரம் | உபயதாரர் |
|---|---|---|---|
| 05.10.21 (செவ்வாய்) | ஸ்வாமி தேசிகன் கண்ணாடியறைக்கு எழுந்தருளல் | இரவு 8:00 | ஸ்ரீ. C.R. ராகவன் குடும்பத்தினர் |
| 06.10.21 (புதன்) | பல்லக்கு | காலை 7:00 | 1. ஸ்ரீ. T.C. ரங்கராஜன், 2. ஸ்ரீமதி லக்ஷ்மி ராமபத்ரன் , 3. Prof. ஸ்ரீ. ரங்கராஜன் |
| | யாளி வாஹனம் | இரவு 7:30 | Electoral Board |
| 07.10.21 (வியாழன்) | பல்லக்கு | காலை 7:00 | 1. ஸ்ரீமதி எச்சம்மாள் பண்டு 2. ஸ்ரீ K. ராஜகோபால் |
| | சூர்யப்ரபை | இரவு 7:30 | 1. ஸ்ரீமதி எச்சம்மாள் பண்டு 2. ஸ்ரீ V. ராஜகோபால் |
| 08.10.21 (வெள்ளி) | ஸ்ரீ பெருமாள் கருட வாகனம், ஸ்ரீ தேசிகன் தங்க கேடயம் | காலை 7:00 | 1. ஸ்ரீமதி பத்மா சாரங்கன் குடும்பத்தினர், 2. ஸ்ரீ P. ஸ்ரீநிவாஸராகவன் குடும்பத்தினர், 3. ஸ்ரீ R. பார்த்தஸாரதி |
| | சிம்ஹ வாஹனம் | இரவு 7:30 | 1. ஸ்ரீ S.R.R. ஆசார்யா குடும்பத்தினர், 2. ஸ்ரீ T.P. பத்மநாபன் |
| 09.10.21 (சனி) | பல்லக்கு | காலை 7:00 | 1. ஸ்ரீ.R. வெங்கடேஷ், 2. ஸ்ரீமதி ஸ்ரீநிவாஸன் |
| | சந்திரப்ரபை | இரவு 7:30 | 1. ஸ்ரீ T.T. ரகுராம், 2. ஸ்ரீ குஞ்சிதபாதம் |
| 10.10.21 (ஞாயிறு) | பல்லக்கு | காலை 7:00 | 1. ஸ்ரீ V.A. ரகு குடும்பத்தினர், 2. ஸ்ரீ S.T. ராகவன் குடும்பத்தினர் 3. ஸ்ரீமதி கனகம்மாள் பண்டு |
| | ஹம்ஸ வாஹனம் | இரவு 7:30 | 1. ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் K. ஸ்வாமி, 2. ஸ்ரீ A. நரஸிம்மன் |
| 11.10.21 (திங்கள்) | சூர்ணுபிஷேகம், பல்லக்கு | காலை 6:30 காலை 7:00 | 1. ஸ்ரீ V.P. ப்ரேம் குமார் 2. ஸ்ரீமதி P.R. விஜயலக்ஷ்மி பண்டு |
| | குதிரை வாஹனம் | இரவு 7:30 | 1. ஸ்ரீ N. கஸ்தூரிரங்கன் 2. ஸ்ரீமதி ரமாமணி ராஜகோபாலன் |

கண்ணுக்கினியன

ஸ்ரீ:

| நாள் | உற்சவம் | நேரம் | உபயதாரர் |
|---|---|---|---|
| 12.10.21 (செவ்வாய்) | பல்லக்கு | காலை 7:00 | 1. ஸ்ரீ V.R. ராஜகோபால், 2. ஸ்ரீ V. கண்ணன் |
| | ஸ்ரீ ஹயக்ரீவ ஆராதனம் | மாலை 4:00 | ஸ்ரீ ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி பரகாலமடம், மைசூர் |
| | மேனா பல்லக்கு (அக்ஷராப்யாச திருக்கோலம்) | இரவு 7:30 | 1. ஸ்ரீ N. நாராயணன் ராம்ஜி, 2. ஸ்ரீ சஞ்ஜீவ் செல்லப்பா, 3. ஸ்ரீ C. சந்தோஷ் |
| 13.10.21 (புதன்) | மேனா பல்லக்கு | காலை 7:00 | 1. ஸ்ரீ மாடபூசி சுதர்ஸனம் ஐயங்கார் பண்டு 2. ஸ்ரீ S.S. ராகவன் |
| | யானை வாஹனம் | இரவு 7:30 | 1. ஸ்ரீ G. வாசுதேவன், 2. ஸ்ரீ T.V. ராமானுஜம் |
| 14.10.21 (வியாழன்) | திருத்தேர் | காலை 7:00 | ஸ்ரீ ஸ்ரீநிவாஸ கைங்கர்ய ஸபா |
| | தங்க கேடயம் | இரவு 7:30 | 1. ஸ்ரீ N.S. கண்ணன், 2. ஸ்ரீ C. கிருஷ்ணன் |
| 15.10.21 (வெள்ளி) | ஸ்ரீ தேசிகன் சாற்றுமுறை | | |
| | மூலவர் திருமஞ்ஜனம் | | தேவஸ்தானம் |
| | மங்களாசாஸனம் | காலை 5:00 | 1. ஸ்ரீ S. வரததேசிகன் & ஸ்ரீ V. வெங்கடேஷ் |
| | ஸ்ரீ பெருமாள், ஸ்ரீ தேசிகன் புறப்பாடு | காலை 8:00 | வனபோஜனம் ட்ரஸ்ட் |
| | திருமஞ்ஜனம் | காலை 10:00 | ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அசோஸியேஷன் (பதிவு) |
| | பத்தி உலாத்தல் | மாலை 6:00 | |
| | ஒய்யாளி, திருப்பாவை சாற்றுமுறை, மங்களகிரி புறப்பாடு, திருவாய்மொழி சாற்றுமுறை | இரவு | |
| 16.10.21 (சனி) | கந்தப்பொடி வஸந்தம் | காலை 7:00 | ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அசோஸியேஷன் (பதிவு) |
| | விடையாற்றி உத்ஸவம் முதல் நாள் – திருமஞ்ஜனம் | மாலை 4:30 | ஸ்ரீமதி சுபத்ரா பாலாஜி குடும்பத்தினர் |
| 17.10.21 (ஞாயிறு) | விடையாற்றி உத்ஸவம் இரண்டாம் நாள் – திருமஞ்ஜனம் | மாலை 4:30 | ஸ்ரீ S. சுந்தரம் |
| 18.10.21 (திங்கள்) | விடையாற்றி உத்ஸவம் மூன்றாம் நாள் – திருமஞ்ஜனம் | காலை 9:30 | ஸ்ரீ. உ.வே. பி.வி.ராகவன் (பண்டு) ஸ்ரீ. மதுதேசிகன் குடும்பத்தினர் |
| | புஷ்ப பல்லக்கு | இரவு 7:30 | |

(பிரதி தினம் காலை 9:00 மணிக்கு திருமஞ்ஜனம், மாலை 6:00 மணிக்கு பத்தி உலாத்தல்நடைபெறும்)

**Note:** 1. CONTRIBUTIONS, IF ANY, CAN BE MADE BY WAY OF CASH OR CHEQUE (in favour of **Sri Vedantha Desikar Devasthanam)**

2. Those who have not updated their contact details like mobile number, E-mail ID are requested to update the same, in order to ensure frequent and speedier communication.

ஸ்ரீ:

# அர்ச்சையை ஆரப்பருகும் நம் ஆசார்ய வள்ளல்

ஸ்ரீமதி அனுராதா சேஷாத்ரி, பெங்களூரு

**பஹூநாம் ஜன்மநாமந்தே ஜ்ஞானவான் மாம் ப்ரபத்யதே|**
**வாஸுதேவ: ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப:||**
**(பகவத் கீதை 7-19)**

''ஞானிகளான மஹாத்மாக்கள் பல பிறவிகளுக்குப் பிறகு இறுதியில் ஸர்வமும் வாஸுதேவன் என்கிற ப்ரஜ்ஞையோடு ப்ரபத்தி செய்து என்னை வந்தடைகின்றனர். அத்தகையவர்கள் மிக அரிதாகத்தான் அவதரிப்பர்'' என்று கீதாசார்யன் உபதேசித்தருளினபடி மிக அரிதாக அவதரித்தவர் நம் ஆசார்ய ஸார்வபௌமரான ஸ்வாமி நிகமாந்த மஹா தேசிகன்.

இவருடைய மஹிமை அஸாதாரணமானது. ஜ்ஞானம், வைராக்யம், அநுஷ்டானம் என எத்திறத்திலும் அளத்தற்கரிய மஹிமை கொண்ட அவதார புருஷர் நம் ஸ்வாமி தேசிகன்! ஸ்வாமி தன்னுடைய ஞான மிகுதியாலும், அனுஷ்டானத்தினாலும், வாத சக்திகளாலும் தமது ஸ்ரீ ஸூக்திகளில் ப்ரபத்தி மார்க்கத்தை விசேஷித்துக் காட்டி உலகிற்கு மஹோபகாரம் செய்த ஆசார்யர்! ஸ்வாமி தேசிகனின் ஸ்ரீ ஸூக்திகள் அவரது ஜ்ஞானம், வைராக்யம் போன்ற சிறந்த குணங்களாலும் மற்றும் அவருடைய பக்தியின் அனுபவ பரீவாஹமாகவும் ப்ரவாஹித்தன. பகவத் ராமானுஜரால் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீ விசிஷ்டாத்வைத வேதாந்தத்தை திக்கெட்டிலும் பரப்பிய பெருமையையும் உடையவர் ஸ்வாமி தேசிகன்.

ஆழ்வார், ஆசார்யர்களிடம் விசேஷமான பக்தி உடையவர் ஸ்வாமி தேசிகன். குறிப்பாக ''கலியனுரை குடிகொண்ட கருத்துடையவர்'' என்று போற்றப்படுபவர். திருமங்கை ஆழ்வாருக்கும் ஸ்வாமி தேசிகனுக்கும் கருத்துகளை வெளியிடுவதில் பல ஒற்றுமைகள் இருப்பதாகப் பெரியோர்கள் அனுபவிக்கின்றனர். இதில் ப்ரதானமாக அர்ச்சாவதாரப் பெருமானிடத்தில் இருவருக்கும் உள்ள ஊற்றம் குறிப்பிடத்தக்கது.

**'அறிவு தரும் பெரிய திருமொழி தப்பாமல்... இரங்கு நீயே'** என்று ஸ்வாமி தேசிகன் ப்ரபந்த ஸாரத்தில் திருமங்கை ஆழ்வாரை பிரார்த்திக்கிறார். அறிவு தரும் என்கிற அடைமொழிக்கு, அர்ச்சாவதாரத்தில் பல திவ்யதேசங்களில் கோயில் கொண்டுள்ள எம்பெருமானை அனுபவித்து, மங்களாசாஸனம் செய்து, அதன் மூலம் வேத ப்ரதிபாத்யனான எம்பெருமானை பற்றிய நல்ல அறிவைத் தரும் என்பதாக ஆன்றோர்கள் இதற்கு வியாக்யானம் செய்கின்றனர்.

எம்பெருமான் பர, வியூஹ, விபவம், அந்தர்யாமி, அர்ச்சை என ஐந்து நிலைகளில் எழுந்தருளியுள்ளான். இவற்றுள், தாகம் எடுத்தவன் தனது விடாய் தீர நீர்நிலைகளில் உள்ள தண்ணீரைப் பருகி தனது தாகத்தை தீர்த்துக் கொள்வதைப் போன்றதே அர்ச்சாவதாரம். எம்பெருமான் திருவேங்கடமுடையானாகவும், அரங்கனாகவும், பேரருளாளனாகவும், ந்ருஸிம்ஹனாகவும் இப்படி பல திவ்யதேசங்களில் ஸேவை ஸாதிப்பதையே பலவாறாக கலியன் தம் ப்ரபந்தங்களின் மூலம் அனுபவித்தார். வேதத்தில் எம்பெருமானின் திவ்யாத்ம ஸ்வரூபம் கூறப்பட்டுள்ளது. அர்ச்சாவதாரத்திலோ எனில் எம்பெருமானின் திவ்ய மங்கள விக்ரஹம் ப்ரத்யக்ஷம். மங்கை மன்னன் தம் நெஞ்சினை நிறை கொண்ட நாகை அழகியாரின் அர்ச்சா திருமேனி அழகைக் கண்டு, **''அச்சோ ஒருவர் அழகியவா!''** என்று வியந்து பாசுரமிடுகிறார்.

இப்படி கலியனைப் போன்றே அர்ச்சாவதார எம்பெருமானிடத்தில் மிகுந்த ஈடுபாடு உடையவராகத் திகழ்ந்தவர் ஸ்வாமி தேசிகன். காஞ்சி, ஸ்ரீரங்கம், திருமலை, திருவஹீந்த்ரபுரம் மற்றும் பல திவ்யதேசங்களிலும் சிற்சில காலங்கள் எழுந்தருளியிருந்து அவ்வெம்பெருமான்களைத் தாம் இயற்றிய ஸ்தோத்ர, பாசுரங்கள் மூலமாக மங்களாசாஸனம் செய்து வந்தார். திவ்யதேச எம்பெருமான்களும் இவற்றைப் பெற்று மிக உகந்தனர்.

அர்ச்சா விக்ரஹ ஸௌந்தர்யத்தில் மிகுந்த ஈடுபாடு உடைய ஸ்வாமி தேசிகன், பேரருளாளன் திருவடியில் சரணாகதியை அனுஷ்டித்து, அவன் கண்டருளும் உத்ஸவாதிகளை அனுபவித்துக் கொண்டு மன்னிக் கிடந்தவாறே, **'வைகுண்டவாஸேபி நமேபிலாஷ:'** என்பதாக வரதராஜனின் திவ்ய மங்கள விக்ரஹத்தின் அழகை இடைவிடாது ஸேவிக்கும் பேறு பெறின் தமக்கு வைகுண்ட வாஸத்திலும் ஆசை உண்டாவதில்லை என்று ஆணையிட்டுக் கூறுகிறார் வரதராஜ பஞ்சாசத்தில். **''கண்டோம், கண்டோம், கண்டோம், கண்ணுக்கினியன கண்டோம்''** என்று வரதனின் வடிவழகைக் கண்டு களித்து இதுவே மோக்ஷானந்தம் என்று அறுதியிட்டுக் கூறுகிறார். **''ஏரார் முயல் விட்டுக் காக்கைப் பின் போவதே''** என்றல்லவோ நம் கலியனும் அர்ச்சையில் ஆழங்காற்பட்டு அருளிச் செய்துள்ளார்! **''உன் வடிவழகு மறவாதார் பிறவாதாரே''** என்று 'நவமணிமாலை'யில் அடியவர்க்கு மெய்யனின் வடிவழகில் ஈடுபட்டு அற்புதமாக அருளிச்செய்துள்ளார்.

இவ்விதம் தேவப்பெருமானையும், தெய்வ நாயகனையும் அனுபவித்தவாறே ஸ்வாமி தேசிகனின் மனம் பூலோக வைகுண்டமாம் ஸ்ரீரங்கத்தில், ரங்க விமானத்தின் கீழே எழுந்தருளியுள்ள அரங்கன் பால் ஓடுகின்றது என்று

ஸ்வாமியின் அர்ச்சாவதார பெருமானிடத்தில் உள்ள ஈர்ப்பினை 'ஹம்ஸ ஸந்தேசம்' என்னும் காவ்யத்தின் ஒரு ச்லோகத்தின் மூலம் அனுபவிக்கின்றனர் பெரியோர்கள்.

*ஸத்வே திவ்யே ஸ்வயம் உதயத: தஸ்ய தாம்ந: ப்ரஸங்காத்*
*மஞ்ஜூஷாயாம் மரகதம் இவ ப்ராஜமாநம் ததந்த்||*
*சேதோ தாவதி அபஹிதபுஜம் சேஷ போக சயாநம்*
*தீர்க்க அபாங்கம் ஜலதி தநயா ஜீவிதம் தேவம் ஆத்யம்|| [46]*

ரஜஸ் மற்றும் தமோ குணங்கள் சேராத திவ்யமான ஸத்வ குணம் மட்டுமே விளங்கும் இடத்தில் தானாக அந்த ரங்க விமானம் இருக்கப் போகிறது. அந்த விமானத்திற்குள் தங்கத்தால் ஆகிய பெட்டியில் வைக்கப்பட்ட மரகத மணி போன்றவனும், ஆதிசேஷனின் உடல் மீது தனது புஜத்தை தலையணையாக்கிக் கொண்டு சயனித்தவனும், நீண்ட கண்களைக் கொண்டவனும், திருபாற்கடலின் மகளான ஸ்ரீ ரங்கநாச்சியாரின் உயிரும் ஆகிய ஸ்ரீ ரங்கநாதன் உள்ளான். உலகின் காரணமான அந்த ஸ்ரீரங்கநாதனைக் குறித்தே என்னுடைய சிந்தனை ஓடியபடி உள்ளது.' என்று ஸ்வாமி தேசிகன் வர்ணிப்பதைக் காணலாம்.

மேலும்,

*பராவரசுக க்ராஹ்யம் ப்ரேம போதப்ரஸாவகம்|*
*ஸ்வரூபாத் ஸ்வாமினோ ரூபம் உபாதேயதமம் விது||*

எம்பெருமானுடைய ஆத்ம ஸ்வரூபத்தை விட அவனது திருமேனி தான் நாம் பற்றுவதற்கு ஏற்றது. அதுவே நமக்கு எம்பெருமானைப் பற்றிய ஜ்ஞானத்தையும் அவனிடத்தில் பக்தியையும் உண்டாக்கும். எனவே அர்ச்சாவதாரத்தில் ஈடுபட்டு அனுபவிக்க வேண்டும் என்று ஸ்வாமி தேசிகன் அருளிச்செய்துள்ளார்.

இவ்விதம் அர்ச்சாவதரத்தில் ஆழ்ந்த ஈடுபாடுடைய ஸ்வாமி தேசிகன் தம் அந்திம தசையிலும் தனக்கு ரங்கநாதனும், ரங்கநாயகித் தாயாரும் ஸேவை ஸாதிக்க வேண்டும் என்று மனமுருகி ப்ரார்த்திக்கின்றார் பாதுகா தேவியிடம்.

*அந்தே ததா த்வமவிலம்பிதமாநயந்தீ*
*ரங்காத் புஜங்கசயனம் மணிபாதரக்ஷே|*
*காமம் நிவர்த்தயிதுமர்ஹஸி ஸம்ஜ்வரம் மே*
*கர்ப்பூரசூர்ணபடலைரிவ தூளிபிஸ்தே||*
*[பராக பத்ததி - 369]*

தன்னுடைய கடைசி காலத்தில் ஆசார்யருடன் ரங்கநாதனும் தனக்கு ஸேவை ஸாதிக்க வேண்டும் என ஸ்வாமி தேசிகன் ப்ரார்த்திப்பது இந்த ச்லோகத்தின் உட்கருத்து என்பதாக ஸ்வாமி நம்மாண்டவன் வ்யாக்யானம் அருளிச்செய்துள்ளார்.

பேரருளாளன் தாம் அருளிச் செய்த ஆறு வார்த்தைகள் மூலம் ப்ரபந்நர்களுக்கு அந்திம ஸ்ம்ருதி வர்ஜனம் என்று அருளியிருந்தாலும் அந்திம ஸ்ம்ருதி, அதாவது மரணமாகும் அக்கடைசி ஸமயத்தில் பகவனை நினைத்திருப்பது விசேஷம் என்பது வழக்கில் உள்ளது. 'அப்போதைக்கு இப்போதே சொல்லி வைத்தேன்...' என்கிறார் பெரியாழ்வாரும்! ஆனால் ஸ்வாமி தேசிகனின் ஆசையோ அழகியது! அளவிடற்கரியது! பகவானின் நினைவு மட்டும் போதாது, அவனழகைக் கண்களாரப் பருகியவண்ணமே தம் அந்திமப் பயணத்தை (அர்சிராதியில் கூட?) பயணிக்க வேண்டுமாம்!, ''**அதராஹித சாரு வம்ச நாளா:...**'' என்பதாகவன்றோ வேண்டுகிறார்! ''தம் அந்திம தசையில் குழலூதும் அழகிய திருவதரங்களுடன் மயிற்பீலியணிந்த திருமுடியுடனும் கருநீலவண்ணன் அக்கண்ணனே காட்சி தர வேண்டும்'' என்கிறார்.

மேலும் ''**வெஞ்சொலாளர் கால தூதர் வீசு பாசம் வந்தென் மேல், விழுந்தழுந்தி யான் அயர்ந்து வீழ்வதற்கு முன்னம் நீ**'' வந்து அடியேனை அபயப்ரதானம் செய்து ரக்ஷிக்க வேண்டும் என்று அடியவர்க்கு மெய்யனை ப்ரார்த்திக்கிறார். ஆச்ரிதர்களை நழுவ விடாதவன் (அச்சுதன்) என்கிற பெருமையைக் காப்பாற்றிக் கொள்வதில் உனக்குள்ள த்வரையினால் நீ அந்நேரத்தில் ஓடிவந்து அடியேனைக் காத்தருள வேண்டும் என்று ப்ரார்த்திக்கின்றார். அவருடைய அகமெல்லாம் அர்ச்சையிலே திருவுடனமர்ந்து அருளும் அத்தெய்வநாயகனே நிறைந்திருந்தான் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ!

**பாசி தூர்த்துக் கிடந்த பார்மகட்குப் பண்டொரு நாள், அஹம் ஸ்மராமி மத் பக்தம், நயாமி பராங்கதிம்** என்று வாய் மொழிந்தபடியே எம்பெருமான் தன்னை அழைத்துச் செல்ல விரைந்து வருவான் **நற்றுளவேந்திய நாயகனாக** என்று திட விச்வாசத்துடன் அருளிச் செய்கிறார்,

*உறையிட்ட வாளென ஊனுளுறையுமுயோகியரை*
*நறைமட்டொழிவற்ற நற்றுளவேந்திய நாயகன்றான்...*
*[பரமபத ஸோபனம் - 12].*

ஸ்வாமி தேசிகன் இவ்வண்ணம் ஏதத் தேஹாவஸானே என்பதாக இந்த சரீரம் உள்ளவரை அர்ச்சாவதாரப் பெருமாளின் வடிவழகை அனுபவித்ததோடு அல்லாமல் அந்திம காலத்திலும் அவ்வனுபவத்தைப் பெற வேண்டும் என்று திருவுள்ளம் பற்றினார்.

இவ்வாசார்ய வள்ளல் கருணை உள்ளம் கொண்டு, ஆழ்வார் ஆசார்யர்கள், பகவத் ராமனுஜர் ஆகியோர் காட்டிய வழியினை அடியொற்றி இப்பூவுலகிலும் எம்பெருமானை அனுபவிக்கும் வழியையும் அதனால் பெறும் ஆனந்தத்தையும் நமக்கும் காட்டிப் போந்தார்.

ஸ்வாமி தேசிகனின் தயையே நமக்கு ஒரு பற்றுக்கோல். இத்தகு உயர்ந்த கொள்கைகளை உடைய ஸ்ரீ வைஷ்ணவத்தின் செழிப்பு மேலும் பல நூறு ஆண்டுகள் தொடர்ந்து தழைத்து ஓங்குவதற்கு **இன்னுமோர் நூற்றாண்டிரும்** என்று ஸ்வாமி தேசிகன் திருவடிகளுக்குப் பல்லாண்டு பாடுவோம்!

ஸ்ரீ:

# வேங்கடநாதன் அநுபவித்த ச்ரிய:பதியின் ஸுநாதங்கள்

ஸ்ரீ சோகத்தூர் ஸ்ரீவத்ஸன், நங்கநல்லூர்

கேட்கப்படுவது எதுவோ, அதுவே ச்ருதி. அபௌருஷேயங்களான வேதத்தைச் ச்ருதி எனவும் கூறுவர். இன்றளவும் வேதத்தை எழுதி வைத்துப் படிக்காமல், வாயால் சொல்லி, காதால் கேட்டறிந்து ச்ரவணம் செய்தே தலைமுறை தலைமுறையாக அநுஸந்தித்து வருகிறோம். கடலுக்குள்ளே முத்துக்கள், பவளங்கள் மற்றும் ரத்னங்கள் போன்ற எண்ணற்ற விலைமதிப்பில்லாத செல்வங்கள் ஒளிந்திருக்கின்றன. அதுபோல பிராட்டியுடன் கூடிய எம்பெருமான் என்னும் திருக்கல்யாணகுணங்களின் கடலுள் மறைகள் மறைந்திருக்கின்றன. அம்மறையின் காரணமாகவும் காரியமாகவும் இருக்கிறான் பெருமான். அதனாலேயே அவனுக்கு ச்ருதிஸாகரன் என்ற திருநாமம் வழங்கப்படுகின்றது.

தாம் விசேஷமாகப் பிரகாஸிக்கும் இடங்களை அர்ஜுனனுக்குச் உபதேஸித்துக்கொண்டு வரும் போது **''வேதானாம் ஸாமவேதோஸ்மி''** – ''வேதங்களுக்குள் நான் ஸாமவேதமாக இருக்கிறேன்'' என்று அறிவிக்கிறான் கீதாசார்யன். திருப்பாற்கடலில் நித்ய முக்தர்கள் புடைசூழ தம் தேவிமார்களுடன் அரவணையில் பள்ளிகொண்டு ''ஹா வு ஹா வு ஹா வு'' என்று ஸதா ஸர்வகாலமும் ஸாம கானத்தை கேட்டருளி பரமாநந்த ஸ்வரூபியாய்த் திகழ்கிறான்.

அப்பேர்ப்பட்ட பெருமைகளை உடைய ஸாம வேதத்திலிருந்து கானமும், ஸங்கீத சாஸ்த்ரமும் தோன்றியது. அதன் அடிப்படையில் நாதம் உருவானது. இவையனைத்திற்கும் ப்ரமாணமாய் உள்ள ச்ரிய: பதி தன் விபவ அவதாரங்களின் போது அவன் திருவாயிலிருந்து பிரதானமாய் எழுந்த ஒலிகளின் ஸுநாதங்களையும் அவற்றின் மூலம் அவனது மேன்மையையும் ரக்ஷகத்வத்தையும் அவன் கண்டையின் அவதாரமான நம் தூப்புல் வள்ளலின் கவிதை ரஸங்கள் கொண்டு அநுபவிப்போம்.

**உலகை ரக்ஷிக்கும் ஸ்ரீ வராஹப் பெருமானின் 'குர்குரம்':**

*கோபாயேதநிசம் ஜகந்தி குஹநாபோத்ரீ பவித்ரீக்ருத -*
*ப்ரஹ்மாண்ட: ப்ரளயோர்மிகோஷ குருபி: கோணாரவை: குர்குரை:|*
*யத்தம்ஷ்ட்ராங்குர கோடிகாட கடநா நிஷ்கம்ப நித்யஸ்திதி:*
*ப்ரஹ்ம ஸ்தம்பமஸௌதஸௌ பகவதீ முஸ்தேவ விச்வம்பரா||*

**(ஸ்ரீ தசாவதார ஸ்தோத்ரம் - 4)**

''ப்ரளய காலத்தில் கடலுள் மூழ்கிய பூமியை மீட்க ஒரு பெரிய பன்றி வடிவு கொண்டு அவதரித்தான் எம்பெருமான். அப்பொழுது அவன் திருமூக்கில் இருந்து எழுந்த 'குர்குர்' என்ற ஒலியானது பிரளய காலத்தில் கடல் அலைகள் மோதும்பொழுது எழும்பும் ஒலியைப் போல் மிகுந்திருந்தன. அவ்வொலிகள்



ஸ்வாமி தேசிகன்

ப்ரஹ்மாண்டங்கள் முழுதும் பரவி அவற்றை பரிசுத்தமாக்கின. இவ்வொலிகளுடன், வராஹப்பெருமான் தன் கோரைப்பல்லின் நுனியில் பூமியைத் தரித்து எடுத்து வருகிறான். அப்பூமி ஒரு பன்றியின் கோரைப் பல்லில் ஒட்டியிருக்கும் கிழங்குபோலக் காட்சியளிக்கின்றது. வராஹப்பெருமானின் கோரைப் பல்லை இறுகப் பற்றியிருக்கும் பூமிதேவி சிறிதும் அசையாமல் நிலைத்திருக்கிறாள். பெருமைகள் பொருந்திய இந்தப் பூமிதேவி கோரைக் கிழங்கு போல் நின்று பிரமன் முதல் துரும்பு வரை உள்ள அனைத்து சராசரங்களும் உற்பத்தியாகக் காரணமாக இருக்கின்றாள். இந்த வராஹப்பெருமானின் திருமூக்கின் ஒலிகள் உலகங்கள் அனைத்தையும் ரக்ஷிக்க வேண்டும்.'' என்று ஸ்வாமி தேசிகன் தலைக்கட்டுகிறார். வராஹ அவதார வைபவத்தை இவ்வளவு கவிநயத்துடன் வேறு யாரே வர்ணனம் செய்வார்!.

**மயக்கும் மாதவனின் வேணுகானம்:**

*மஹஸே மஹிதாய மௌளிநா*
*விநதேநாஞ்ஜலிமஞ்ஜநத்விஷே|*
*கலயாமி விமுக்தவல்லவீ -*
*வலயாபாஷிதமஞ்ஜுவேணவே||*
*[ஸ்ரீ கோபால விம்சதி - 15]*

*ஜயதி லளிதவ்ருத்திம் சிக்ஷிதோ வல்லவீநாம்*
*சிதிலவலயசிஞ்ஜா சீதளை: ஹஸ்ததாளை:|*
*அகிலபுவநரக்ஷா கோபவேஷஸ்ய விஷ்ணோ:*
*அதரமணி ஸுதாயாமம்சவான் வம்சநால:||*
*[ஸ்ரீ கோபால விம்சதி - 16]*

''கண்ணனும் இடைப்பெண்களும் ராஸக்க்ரீடையில் ஈடுபடுகின்றனர். குழலைத் தன் திருவதரத்தில் வைத்து இனிய ஓசையை எழுப்புகின்றான் கண்ணன். அப்பொழுது அழகிய இடைப்பெண்கள் தங்கள் கைகளால் குழலோசைக்கு ஏற்றவாறு தாளம் போடுகின்றனர். இடைப்பெண்கள் தங்கள் கைவளையல்களை இறுக்கமின்றி தரித்திருக் கின்றனர். ஆதலால் வளையல்களில் இருந்து வரும் ஒலி, கை போடும் தாள ஒலியோடு சேர்ந்து மிக இனியதாகின்றது. இவர்கள் போடும் தாளம் புல்லாங் குழலுக்கு அபிநய சாஸ்த்ரத்தில் உள்ள ''லளிதம்'' என்னும் அபிநய முறையைக் கற்பிக்கின்றன. அனைத்துலகையும் காக்கத் தானே எம்பெருமான் கோவலருள் கோவலனாய் அவதரித்திருக்கின்றான். குழலூதும் கண்ணனின் செவ்வாயின் அமுதத்தில் கோபியரைப் போல தானும் பங்குகொள்ளும் திருக்குழல் மிகப் பெருமை பெற்று விளங்குகின்றது.''

ஆயர் குலச் சிறுவனாய் அவதரித்து, தன் ஸௌலப்ய-ஸௌசீல்யங்களைக் காட்டி அவனிடத்தில் மயங்கச் செய்து நம்மை அடிமை செய்து ஆட்கொள்ளும் அவன் திருவிளையாடல்கள் தான் எத்துணை! கண்ணனின் வேணு கானத்தைக் கொண்டாடாத ஆழ்வார்கள் இல்லை. இருப்பினும் ஸ்வாமி தேசிகனின் இவ்வர்ணனம் கோபியரின் வளையல் ஒலி கண்ணன் குழலோசையுடன் இரண்டறக் கலந்து ஆனந்தத்தை அளிப்பது போல பேரானந்தத்தை நமக்கு அளிக்கிறது.

**மூன்று வேதங்களின் ஸாரமாக உள்ள ஸ்ரீ ஹயக்ரீவனின் ஹலஹலம்:**

*ஸ்வத: ஸித்தம் சுத்தஸ்படிகமணி பூப்ருத்ப்ரதிபடம்*
*ஸுதாஸத்ரீசீபி: த்யுதிபிரவதாத த்ரிபுவநம்|*
*அநந்தைஸ்த்ரய்யந்தை: அநுவிஹித ஹேஷா ஹலஹலம்*
*ஹதா சேஷாவத்யம் ஹயவதனமீடீ மஹி மஹ:||*
*[ஸ்ரீ ஹயக்ரீவ ஸ்தோத்ரம் - 2]*

*ஸமாஹார: ஸாம்நாம் ப்ரதிபத₃ம்ருசாம் தாம யஜுஷாம்*
*லய: ப்ரத்யூஹாநாம் லஹரிவிததிர்போதஜலதே:|*
*கதாதர்பக்ஷுப்யத்கதககுலகோலாஹலபவம்*
*ஹரத்வந்தர்த்வாந்தம் ஹயவதநஹேஷா ஹலஹல:||*
*[ஸ்ரீ ஹயக்ரீவ ஸ்தோத்ரம் - 3]*

ஸ்ரீ ஹயக்ரீவனே தமக்கு ஆசார்யனாய் எழுந்தருளி தம் திருவுள்ளத்தில் எழுதியருளிய விஷயங்கள் அனைத்தையும் அனைவரும் அறிந்து உஜ்ஜீவிப்பதற்காக ஓலையில் எழுதியதாக ஸ்வாமி தேசிகன் ஸாதிக்கிறார். அப்பேர்ப்பட்ட பெருமைகளை


வேணுகோபாலன் திருக்கோலம்

உடைய பெருமானின் ''ஹல-ஹல'' நாதம் மூன்று வேதங்களின் ஸாரம் என்று இங்கே தலைகட்டுகிறார்: ''அடியார்களை உய்விக்க எம்பெருமான் தாமாகவே ஸ்ரீ ஹயக்ரீவனாக அவதரித்தான். அப்பெருமானின் திருமேனி தூய படிக மணிகளாலாகிய ஒரு மலைபோல் விளங்குகின்றது. அந்த எம்பெருமானின் அமுதம் போன்ற திருமேனியிலிருந்து வீசும் வெண்மையொளியானது மூவுலகையும் வெண்மை நிறமாக்குகிறது. அவன் குதிரையுருவுக்கு ஏற்றவாறு கனைக்கும் பொழுது எழும்பும் ''ஹல ஹல'' என்னும் ஒலியில் எல்லையற்ற வேதாந்தங்களின் அர்த்தங்கள் அடங்கியுள்ளன. இவ்வொலியைக் கேட்பவர்களுக்கு வேதாந்த அர்த்தங்கள் நன்கு விளங்குமாறு செய்கின்றான் இப்பெருமான். அடியார்க்கு வரும் எல்லாத் தீங்குகளையும் ஒழிக்கின்ற, தேஜோமயனாய் நிற்கும் ஸ்ரீ ஹயக்ரீவப் பெருமானை நாம் ஸேவிப்போம். ஸ்ரீ ஹயக்ரீவனுடைய ''ஹல-ஹல'' என்னும் கனைப்பொலி ஸாமவேதத்திலுள்ள எல்லாக் கிளைகளையும் தொகுத்து ஒன்றுகூடிய வடிவம் போலுள்ளது. அவ்வொலி ருக்வேத மந்த்ரங்களுக்கு அர்த்தத்தைக் கூறுவது போல் விளங்குகின்றது. யஜுர் வேத மந்த்ரங்களின் பொருள்கள் அனைத்தையும் தன்னுள் அடங்கப்பெற்றது. கல்வி கற்க உண்டாகும் தடைகள் அனைத்தையும் ஒழித்து ஞானமென்னும் கடலின் அலைவரிசையாய் நிற்கிறது. இப்படி மூன்று வேதங்களின் ஸாரமாக இருந்து கல்வித் தடை களை ஒழித்து ஞானச்சுடரை ஏற்றும் வல்லமையை

உடையது. குயுக்திகளைக் கொண்டு வாதம் புரிவதில் செருக்குக்கொண்ட வேற்று மதத்தினரின் ஆரவாரத்தில் பலர் மயங்குவதுண்டு. அவர்களின் அஜ்ஞானமென்னும் இருளை ஸ்ரீ ஹயக்ரீவனின் 'ஹல-ஹல' ஒலி முற்றிலும் ஒழித்து அருள் புரிய வேண்டும்.''

**எம்பெருமான் பாதுகைகளின் நாதம்:**

எம்பெருமானின் விபவ அவதாரத்தின் போது அவன் திருவாயிலிருந்து பல திவ்ய ஒலிகளை எழுப்பி தன் அடியார்களை ரக்ஷித்தான். ஸம்ஸாரத்தில் உழன்று அல்லல்படும் நம் போன்ற ஜீவாத்மாக்களை வழிப்படுத்தி வானேற்ற அவனே பல அர்ச்சாவதார மூர்த்தியாக ஆங்காங்கே வீற்றிருக்கிறான். திருவரங்கனாக எழுந்தருளி பாதுகைகளைச் சாற்றிக்கொண்டு ஸஞ்சாரம் செய்யும் போது எழும் நாதங்கள் நம்மைப் போன்றவர்களையும் ரக்ஷிக்கக் கூடியவையே என்று ஸ்தாபிக்கிறார் நம் கவி ஸிம்ஹம்.

*மதுவைரிபதாம்புஜம் பஜந்தீ*
*மணிபாதாவநி! மஞ்ஜுஸிஞ்ஜிதேந|*
*படஸீவ முஹு: ஸ்வயம் ப்ரஜாநாம்*
*அபரோபஜ்ஞம் அரிஷ்டசாந்தி மந்த்ரம்||*
*[ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம் - நாத பத்ததி - 7]*

*ச்ருதிபி: பரமம் பதம் முராரே:*
*அநிதங்காரம் அநேவம் இத்யுபாத்தம்|*
*இதம் இத்தமி இதி ப்ரவீஷி நூநம்*
*மணிபாதாவநி ! மஞ்ஜுபி: ப்ரணாதை:||*
*[ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம் - நாத பத்ததி - 8]*

''ஏ கல்லிழைத்த பாதுகையே! உன்னைச் சாற்றிக்கொண்டு பெருமாள் எழுந்தருளும்போது எழும் உன்னுடைய சப்தத்தைப் பார்த்தால் லோகத்தில் ஜீவன்கள் படும் எல்லையில்லாத் துன்பத்தை நீக்குவதற்காக நீ மிகவும் தயை கொண்டு தானாகவே ஒரு புதிய மந்த்ரத்தைச் சொல்லுவது போல இருக்கின்றது. பெருமாளுடைய ஸ்வரூபத்தையும் நித்யவிபூதியின் ஸ்வரூபத்தையும் அதன் ஸங்கதிகளையும் அறிய முடியாதென்று வேதங்கள் சொல்ல அப்படிப்பட்ட விஷயங்களை உன் இனிமையான சப்தங்கள் மூலமாக ஸுலபமாக அறியலாம்.'' என்று நிர்தாரணம் பண்ணுகிறார் ஸ்வாமி தேசிகன்.

''எங்கு, எப்பொழுதெல்லாம் தர்மம் வீழ்ந்து அதர்மம் தலை தூக்குகிறதோ அங்கெல்லாம் தர்மத்தை நிலை நாட்ட நான் யுகந்தோறும் அவதரிப்பேன்'' என்பது எம்பெருமானின் திருவாக்கு. அவ்வாறே எம்பெருமான் பலவிதமான ஸ்வரூபங்களில் திருவவதரித்து யுகந்தோறும் சிஷ்ட பரிபாலன, துஷ்ட நிக்ரஹங்களைத் தன் விபவ அவதாரங்கள் மூலம் நிகழ்த்திக் காட்டி தர்மத்தை ஸ்தாபித்தான்.

*வேதே ஸஞ்ஜாத கேதே முநிஜந வசநே ப்ராப்தநித்யாவமாநே*
*ஸங்கீர்ணே ஸர்வவர்ணே ஸதி தததநுகுணே நிஷ்ப்ரமாணே புராணே|*
*மாயாவாதே ஸமோதே கலிகலுஷ வசாச்சூந்யவாதே: விவாதே*
*தர்மத்ராணாய யோ:பூத் ஸ ஜயதி பகவான் விஷ்ணு கண்டாவதார:*
*[ஸ்ரீ தேசிக மங்களம் - 16]*

அதேபோல வேதங்கள் கலங்கி துன்புற்றிருந்த வேளையில், வ்யாஸ முனிவரின் வாக்யங்களான ப்ரஹ்ம ஸூத்ரம் அவமானத்தை அடைந்திருந்த நேரத்தில், கலியின் பலத்தால் பல விதமான மதங்கள் புற்றீசல் போல் கிளம்பி பராசர மஹரிஷியின் புராணங்கள் வலிமையிழந்து போக, மாயா மற்றும் சூன்ய வாதங்கள் மிகுந்த ஸந்தோஷத்துடன் தலைதூக்கியிருந்த போது, நம் வைதிக தர்மத்தைக் காக்கவும், சரணாகதி மார்கத்தை ஸ்தாபிக்கவும் மஹா விஷ்ணுவான ஸ்ரீமந் நாராயணனின் திருமணியின் அம்சமாக அவதரித்தவர் நம் ஆசார்ய வள்ளல் ஸ்ரீ வேதாந்த தேசிகன். இவரும் தன் திருவவதார வைபவம் மூலம் அடியார்களாகிய நம்மை சிக்ஷித்தும் (சிஷ்ட பரிபாலனம்) வாதியர்களின் வாழ்வறுத்தும் (துஷ்ட நிக்ரஹம்) ஸத்ஸம்ப்ரதாய தர்மத்தை ஸ்தாபித்தார்.

*அன்றிவ்வுலகினை ஆக்கி, அரும் பொருள் நூல் விரித்து*
*நின்று தன் நீள் புகழ் வேங்கட மாமலை மேவி பின்னும்*
*வென்றிப் புகழ் திருவேங்கடநாதன் எனும் குருவாய்*
*நின்று நிகழ்ந்து மண்மேல் நின்ற நோய்கள் தவிர்த்தனனே||*
*[பிள்ளையந்தாதி - 5]*

என்று ஸ்வாமி தேசிகன் திருவவதார வைபவத்தின் மூலமாகவும் அவரருளிய ஸ்ரீஸூக்திகள் மூலமாகவும் நமக்குச் செய்த பேருபகாரத்தை அவரது திருக்குமாரரான ஸ்ரீ நயினாராசார்யர் காட்டுகிறார்.

திருக்கோயில்களிலும் நம் க்ருஹங்களிலும் நாம் பெருமாளுக்குச் செய்யும் நித்யபடி திருவாராதனம் கண்டநாதம் இல்லாமல் பூர்த்தியாகாது. அதேபோல ச்ரிய:பதியின் ஸ்வரூப, ரூப, குண விசேஷணங்களையும், ப்ரபத்தி மார்கத்தையும், கண்டாவதாரமான திருவேங்கடநாதனின் ஸ்ரீ ஸூக்திகள் இல்லாமல் நாம் முழுவதுமாக அறிந்து கொள்ள முடியாது.

**Sponsorships and donations towards publication expenses are welcome**

# Sri Shodasaayudha Sthothram

Sri U. Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

A powerful hymn dedicated to Sri Sudharsana, or, to be more precise, his weapons, Sri Shodasaayudha Sthothram comprises 19 Slokas. After the opening invocation, Swami Desika takes up the sixteen weapons of Sudharsana one by one in a Sloka each and a general summing up and Phala Sruti conclude the Sthothra.

Sudharsana is referred to as Ayudhesa and Hethiraja in this Sthothra, meaning that he is the Lord of Weapons. Interestingly, the Chakra itself takes the pride of place amongst the sixteen as seen in the second Sloka and is the first weapon on Sudharsana's right hand. Sri Desika says, "Lord Vishnu Himself assumes the form of a Chakra (Sudharsana) and He holds the great Chakra which keeps the whole world and the wheel of time under control. May the Discus provide protection to you all forever!"

Shodasa means sixteen and Ayudha, as we all know is device for use in attack. In a sense, the sthothra is not dissimilar to Sri Daya Sathakam.





Lord Sudharsana

In both hymns, the attribute(s) of the Lord is/are hailed. While Compassion of Lord Srinivasa is the subject matter of the Sathakam, Swami Desika sings the glory of the sixteen weapons that adorn as many hands of Sudharsana. These weapons, the author says in the 18th Sloka, Sudharsana uses to safeguard the whole world.

The sixteen weapons which the Azhwan carries — eight each on the right and the left — are as follows. On his right are: 1. Chakra, the Discus; 2. Parasu, the Axe; 3. Kuntha, the Spear; 4. Dhanda, the Baton; 5. Ankusa, the Goad; 6. Agni, the fire; 7. Nandhaka, the Sword; 8. Shakthi, the Dart. On his left are: 9. Sankha, the Conch; 10. Saarnga, the Bow; 11. Paasa, the Noose; 12. Seera, the Plough; 13. Vajra, the Thunderbolt; 14. Gadha, the Mace; 15. Musala, the Pestle and 16. Soola, the Trident.

Swami Desika invokes the grace of each of these weapons from Sloka Nos. 2 to 17, as given below.

1. May the great Discus of the Lord who himself is in the form of Chakra protect you.
2. May the divine Axe of the Lord of weapons, which gave birth to hundreds of axes, protect you.
3. May the Spear of the Lord, which when raised even playfully, chase away demons like birds,

and protect you.

4. May the Baton of the Lord punish your enemies.
5. May the Goad of the Lord, which thwarts worldly ambitions, protect you.
6. May the Sathavakthra Agni of the Lord of weapons consume all human sins as it does moths.
7. May the Sword, which is the embodiment of knowledge, grant the vision of truth.
8. May the Shakthi, which is the undiminishable power of action, remove weakness in you.
9. May the Conch of majestic form and sound protect you.
10. May the Bow, aided with endless arrows and which is an embodiment of Saathvika Ahankara, protect you.
11. May the Noose, a device for creation, snap your ties of Samsara.
12. May the Plough confer on you victories in battles.
13. May the Thunderbolt, declared by the Lord Himself in the Gita as "I am the Vajra among weapons", protect you.
14. May the Mace, which is the embodiment of the Thathva called Mahaan which is the force of destruction of the world, eradicate all your diseases.
15. May the Pestle of Sudharsana, which pounds other pestles to non-entities, destroy your ignorance.
16. May the Trident, which is a natural weapon of Rudhra who discovered Sudharsana Manthra and expounded the same in the Ahirbudhnya Samhitha, confer on you good health.

The background of the birth of this Sthothra is the same as that of Sri Sudharsana Ashtakam, involving the incident at ThirupPut Kuzhi. The use of the second person in the hymn as the beneficiaries of Sri Sudharsana is an interesting pointer. This possibly implies that Swami Desika addressed the inhabitants of ThirupPut Kuzhi and this adds credence to the anecdote regarding epidemic eradication there.

We have seen in the Ashtakam that Swami Desika invoked the grace of Sudharsana and his weapons while composing Paramatha Bhangam. In the final verse (54) of the Tamil Prabandham also the author lists out the names of the weapons, in the same order (underlined).

"திகிரி மழு உயர்குந்தம் தண்டு அங்குசம் பொறி
சிதறு சதமுக அங்கி வாள் வேல் அமர்ந்ததும்
தெழி பணில சிலை கண்ணி சீரங்க செவ்விடி
தெழிய கதை முசலம் திசூலம் திகழ்ந்ததும்......
திரி சுதரிசனர் செய்ய ஈரெண் புயங்களே!!"

Finally, the author rounds off the Sthothra saying, "it is for the wellbeing of noble people that this hymn on the sixteen weapons of Sudharsana, the chief of all weapons, has been composed by Srimath Venkatanatha."

*To be continued...*


## ஆஸ்திகர்களுக்கு ஓர் அறிவிப்பு

பித்ரு காரியங்கள் செய்வதற்கு, சென்னை மயிலை ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான (G.K. மண்டபம் அருகில்) அறைகள் வாடகைக்கு விடப்படும்.

விவரங்களுக்கு தேவஸ்தான அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,**
4/11, கேசவ பெருமாள் கோயில் சன்னதி தெரு,
மயிலாப்பூர், சென்னை 600 004. தொலைபேசி: 044-2495 3799.

# Singular and monumental accomplishment

On Sept. 9, the 'Ramanuja Daya Pathram' Thaniyan Avathara Dina Mahothsavam (Avani-Hastham) was celebrated at our temple with traditional flavour. This year, it assumed special significance because our Divya Prabandha Patasala has reached a monumental milestone of 25 years on the run. It was on the same day in 1996 that the Patasala was founded by **The Vedaparayana Sabha** of our temple and, in hindsight, it was a stroke of a visionary.

When the Sabha requested **Sri U.Ve. Natteri Lakshmi Nrusimhacharyar (a) Srihari Swami** to teach Divya Prabandham at SVDD in 1996, he readily accepted it and began the free classes on this auspicious day. About 70 students benefited from his diligent teaching over the last two batches (1996-2017) and close to 35 are currently undergoing training in the third batch.

About 35 fully qualified students are his products so far, with more than a score in the making. Even during the pandemic period and the resultant lockdown, the classes were held online. The results of Sri Srihari Swami's relentless work are evident in the large and ever-growing Prabandha Ghoshti in our temple festivals and Purapaddu. So much so, the Aruli-cheyal recitation has now become a hallmark of our temple.

A few years ago, Tirumala Tirupati Devasthanam (TTD) conducted examinations for fully qualified persons in Divya Prabandham for filling up positions in its schemes (similar to Veda Parayanam). As many as 15 of Sri Srihari Swami's students participated in it and all of them came out with distinction from high-standard scrutiny. This shows the level of commitment and dedication with which the classes are conducted.

To commemorate the singular accomplishment, a small function was held in the temple on Sept. 9. Sri Srihari Swami was honoured with Perumal and Swami Desikan's Bahumanam by Sri R. Anantha Padmanbhan, Trustee of the temple. A memento was presented by Sri N.R. Ramaswamy and K.R. Srinivasan of The Vedaparayana Sabha, with the former applauding the contribution made by Sri Srihari Swami to our temple and the society.

Divya Prabandham scholars Sri Navalpakkam Ranganathacharyar Swami and Sri Sriperumbudur N. Sathyanarayanacharyar Swami explained how Sri Srihari Swami has made generations of Divya Prabandham scholars. Earlier batch students vividly recalled their learning experiences.

In his acceptance address, Sri Srihari Swami stressed the importance of learning Divya Prabandham and performing Bhagavath Kainkaryam through Ghoshti participation.

**– Trustees**

**Photos from the felicitation function ➔**









**நாட்டேரி ஸ்ரீ உ.வே. ஸ்ரீஹரி ஸ்வாமிக்கு வேதபாராயண ஸபையினரின் பாராட்டு விழா**



திவ்ய ப்ரபந்த அத்யாபகர் ஸ்ரீ உ.வே. நாட்டேரி ஸ்வாமி தமது சிஷ்யர்களுடன்